Reg. No. : ....................................

**SY 20**

Name : .......................................

**MARCH 2019**

Time : 2 ½ Hours
Cool-off time : 15 Minutes

Part – III

## TAMIL (Optional)

Maximum : 80 Scores

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.
- Calculations, figures and graphs should be shown in the answer sheet itself.
- Give equations wherever necessary.
- Electronic devices except non-programmable calculators are not allowed in the Examination Hall.

**1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் ஒன்று வீதம்** **(4 × 1 = 4)**

1. "தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றேயெனும் தாயுள்ளம்" – இக் கவிதை வரியில் வெளிப்படும் பண்பாடு
   (அ) விருந்தோம்பல் (ஆ) ஒருலக மனப்பான்மை
   (இ) பகிர்ந்துண்ணல் (ஈ) விட்டுக் கொடுத்தல்

2. 'உச்சியில் இருந்த வெய்யோன் ஒரடி மேற்கில் வைத்தான்' இதில் 'வெய்யோன்' என்ற சொல்லின் பொருள்
   (அ) மேகம் (ஆ) பறவை
   (இ) சூரியன் (ஈ) சந்திரன்

3. 'கரிப்பு மணிகள்' நாவலில் பேசப்படும் தொழில்
   (அ) உப்புத் தொழில் (ஆ) ஆலைத் தொழில்
   (இ) உழவுத் தொழில் (ஈ) நெசவுத் தொழில்

4. வீரமாமுனிவர் எனத் தன் பெயரை மாற்றிக் கொண்டவர்
   (அ) எல்லீஸ் துரை (ஆ) கால்டுவெல்
   (இ) இராபர்ட் டி நொபிலி (ஈ) கான்ஸ்டன்டைன் ஜோஸப் பெஸ்கி

**5 முதல் 10 வரையுள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக. 2 மதிப்பெண் வீதம்** **(6 ×2 = 12)**

5. 'ஒன்று கலக்கச் செல்லும் நதிகளுக்காகப் பிரிந்து கிடக்கிறோம்' இக் கவிதை வெளிப்படுத்தும் சமூகப் பிரச்சினையை எழுதுக.

6. 'சிற்றிலக்கியங்கள்' என்ற தலைப்பில் பெட்டிச் செய்தி தயார் செய்க.

7. தமிழிலும் மலையாளத்திலும் வழங்கி வரும் எண் பெயர்களில் காணும் ஒற்றுமையை ஒப்பீடு செய்க.

8. "தாய்யமொழி வழிக் கற்றலால் சிந்தனை விரிவடைகிறது" இக் கூற்றைக் காரணத்துடன் விளக்குக.

9. சுற்றுச் சூழல் தினம், வனப் பாதுகாப்பு தினம் என்னும் தினங்களைக் கொண்டாடும் நோக்கத்தைச் செய்தித் துணுக்காக எழுதுக.

10. 'அன்பின் விதைகள்' சிறு கதையில் வரும் பூமிநாதனின் நற்பண்பை விளக்குக.

**11 முதல் 16 வரை அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. நான்கு மதிப்பெண் வீதம்.** **(6×4 = 24)**

11. சொல் வேறுபாட்டால் பொருள் வேறுபடும் என்பதைச் சுட்டிக்காட்ட இரத்தல் – இறத்தல், கொல்கிறேன் – கொள்கிறேன் என்னும் சொற்களின் சரியான பொருள் வெளிப்பட வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

12. தொழில்நுட்ப வளர்ச்சியால் கைத்தொழில்கள் நலிவடைகிறது/ நலிவடையவில்லை என்னும் தலைப்பில் வகுப்பில் நடைபெறும் பட்டி மன்றத்தில் ஏதேனும் ஓர் அணியில் பேசிட குறிப்புகள் தயார் செய்க.

13. பழந்தமிழ் இலக்கியங்களை என்றும் படித்து இன்புறும் வகையில் மாற்றிப் பாதுகாத்திட மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைப் பட்டியலிடுக.

14. "பட்டாடை நெய்தவர்களுக்கு இன்று கந்தலாடை" என்ற தலைப்பில் நெசவாளர்களின் இன்றைய நிலையை எடுத்துக் கூறும் விழிப்புணர்வுக் கட்டுரை எழுதுங்கள்.

15. கீழ்வரும் பகுதியை வாசித்துத் தூய தமிழில் எழுதுக.
"விளையற நெலமுங்க, அப்பன் பாட்டன் காலத்திலேருந்து சோறு போடுற பூமிங்க, இது வெறும் மண்ணு மட்டுமில்லைங்க, எங்க சொகம், துக்கம், கனவு, பரம்பரபரம்பரையா வர்ர வாழ்வு எல்லாமுங்க"

16. சாதனையாளர்களைப் பேட்டி காணும் போது ஏற்படும் நன்மைகளையும், பேட்டி காணும் முன் மேற்கொள்ள வேண்டிய முன் ஏற்பாட்டினையும் விளக்கக் குறிப்பாக எழுதுக.

**17 முதல் 22 வரையுள்ள வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடை தருக. ஆறு மதிப்பெண் வீதம். (4×6 = 24)**

17. 'ஆயத்த வீடுகள்' என்ற தலைப்பில் பயனுள்ள கட்டுரையை வெளியிட்ட நாளிதழ் ஆசிரியருக்கு நன்றி கூறி வாசகர் கடிதம் எழுதுக.

18. "மக்கள் நேரத்தைப் பெரிதும் எடுத்துக் கொள்ளும் தொலைக்காட்சித் தொடர்கள்" – என்ற கருத்தினை மையப்படுத்தி பெற்றோர் – ஆசிரியர் குழுவில் வாசிக்க ஓர் ஆய்வு அறிக்கை தயார் செய்க.

19. "என்னவாகிவிட்டது என் மழைக்கு
என்னவாகிவிட்டது என்
இயற்கைக்கு...."
-பழநிபாரதி

"மரம் வெட்டிய கோடாரி
பார்த்துக்கொள்
கடைசி மழைத்துளி"
-அறிவுமதி

இவ்விரு கவிதைகளின் கருத்துக்களை ஒப்பிட்டு எழுதுக.

20. ஏதேனும் பேரிடர் நேரிடும்போது மனிதநேயத்துடன் ஒன்று திரளும் மக்கள் சிறு சிறு காரணங்களுக்காகச் சண்டையிட்டு வேறுபட்டு நிற்கின்றனர், ஒற்றுமையாய் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி "நேசத்தினால் வரும் நிறைவாழ்வு" என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுக.

21. "பாம்பாய் ஊர்ந்து போகும்
இரயில் வண்டித் தொடர் வாக்கியத்தை
நான்கு துண்டுகளாக்கி
ரெண்டு கமாக்களுடன் ஒரு
முற்றுப்புள்ளி வைக்க நந்தி விலகும்
நடுச்சாமம் விளக்கெரியும்
மொழி புரியும்" – இக் கவிதை வரிகளின் கருத்தோடு ஒன்றி நிறுத்தற் குறிகளின் முக்கியத்துவத்தை விளக்குக.

22. *கீழ்வரும் கவிதை வரிகளை வாசித்து நயம் பாராட்டுக.*

*"ஆயிரம் வண்ணம் காட்டும்*
*அடிவானப் பெரு முகில்கள்*
*பாய்கதிர் ஒளி மறைக்கும்*
*பலமலைக் குன்றைச் சுற்றிப்*
*போய் விழும் ஓடை போலத்*
*தோன்றிடும் புது வெள்ளத்தில்*
*மாய்கதிர் செக்கர் வானம்*
*எழிலோவியம் பார் தம்பி!"*

*(தொடை நயம், பொருள் நயம், ஓசை நயம்)*

**23 முதல் 25 வரையுள்ள வினாக்களில் எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. எட்டு மதிப்பெண் வீதம் (2×8 = 16)**

23. *"சமூக வலைத்தளங்களும் பெண்கள் பாதுகாப்பும்" என்ற தலைப்பில் மகளிர் தினத்தில் பேசிட சொற்பொழிவு உரை தயார் செய்க.*
*(பெண்களைத் தவறாகச் சித்தரித்தல், தவறான செய்தி பரப்புதல், புகைப்படங்களைத் தவறாகப் பயன்படுத்துதல், பாதுகாப்பு வழிமுறைகள்)*

24. *"மொழி அழிந்தால் சமூகம் அழியும்" என்ற தலைப்பில் தாய்மொழியைக் காத்திடும் வழிமுறைகளுடன் பள்ளி ஆண்டு மலருக்கான கட்டுரை எழுதுக.*
*(மொழியால் சமூகம் உருவாதல், மொழி வளர்ச்சியும்-சமூக வளர்ச்சியும்)*

25. *"இன்னல் நிறை ஆழியில்*
*இறங்கி நல்ல முத்தெடுத்து*
*மன்னுலகினுக்களிக்கும் தோழன் – அங்கு*
*மாய்வதனை என்று புவி காணும்"*

*-இக் கவிதை வரிகளில் வெளிப்படும் மீனவப் பிரச்சினைகளை மனதில் கொண்டு "காத்திட வேண்டிய கடலன்னை மக்கள்" – என்ற தலைப்பில் தலையங்கம் எழுதுக.*
*(இயற்கைச் சீற்றம், வாழ்வாதாரம் பாதித்தல், எல்லைப் பிரச்சினை)*

---